මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.:
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.06.04

சுற்றறிக்கை இலக்கம் : DFD/ 2024 – I (I)

செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
செயலாளர், மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்

**குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான அரிசியைக் கொள்வனவு செய்தல்**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான அரிசியைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாக என்னால் வெளியிடப்பட்ட இலக்கம் DFD-2024-I மற்றும் 2024.04.04 ஆம் திகதிய சுற்றறிக்கை தொடர்பானது.

'குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசியை விநியோகித்தல்' எனும் தலைப்பில் கௌரவ சனாதிபதி அவர்களினால் சமர்பிக்கப்பட்ட இலக்கம் 24/1064/601/038-II மற்றும் 2024.06.03 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக வழங்கப்பட்ட 2024.06.03 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டாவது கட்டத்தின் கீழ் விநியோகிப்பதற்குத் தேவையான அரிசியை பின்வரும் விலைகளின் கீழ் தகைமை உள்ள அரிசி வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்து பயனாளிகளுக்கு விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| **அரிசி வகை** | **அரிசி கொள்வனவு விலை (10 கி.கி.பொதி ஒன்றுக்காக ரூபா)** |
|---|---|
| நாட்டு - சிவப்புப் பச்சை அரிசி | 1,860.00 |
| நாட்டு – பச்சை அரிசி | 1,950.00 |
| சிவப்புப்/பச்சை நாட்டு - புழுங்கல் அரிசி | 2,050.00 |

அதன் பிரகாரம், இலக்கம் DFD-2024-I மற்றும் 2024.04.04 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரிசியின் விலைகள் மேற்குறிப்பிட்டவாறு திருத்தப்படுகின்ற அதேவேளையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசியை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது இந்த திருத்தப்பட்ட

விலைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளுமாறு சகல மாவட்ட செயலாளர்களும்/ அரசாங்க அதிபர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறைமை**

மேலே குறிப்பிடப்பட்ட விலை திருத்தத்திற்கு மேலதிகமாக, எனது மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் 2024 ஏப்ரல் மாதத்தில் பயனாளிகளுக்கு அரிசியை விநியோகிப்பதற்காக மாவட்ட செயலாளர்களினால்/ அரசாங்க அதிபர்களினால் பின்பற்றப்பட்ட முறைமையை அதே விதத்தில் இரண்டாவது கட்டத்தின் கீழும் அரிசியை விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்காக ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

அந்த ஆலோசனைகளுக்கு மேலதிகமாக இரண்டாவது கட்டத்தின் கீழ் அரிசியை விநியோகிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாட்டைக் கோரும் போது பின்வரும் ஆலோசனைகளை பின்பற்றுதல் வேண்டும்.

1. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட அளவிலும் பார்க்க ஏதேனும் ஒரு மாவட்டத்தில் பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்குமாயின், அந்த தொடர்புடைய மாவட்ட செயலாளர்களினால்/ அரசாங்க அதிபர்களினால் அதிகரித்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்புடையதாக மீண்டும் மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முதல் முறை அரிசி விநியோகிக்கும் போது மேற்கொள்ளப்பட்ட விதத்திலேயே அரிசியை விநியோகிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாட்டுக் கோரிக்கையை அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

2. ஏப்ரல் மாதத்தில் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டில் / கட்டுநிதியில் மீதம் இருக்கின்றதா என்பதை தேடிப்பார்த்து அவ்வாறு மீதம் இருக்குமாயின், அந்த தொகையை அரிசி விநியோகிப்பதற்குரிய போக்குவரத்து மற்றும் ஏனைய கையாளுகை செலவுகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். (தொடர்புடைய செலவினத்திற்காக மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர்). மேலும், அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்களில் தொடர்ந்தும் மீதம் இருக்குமாயின் அந்தத் தொகையை கழித்துக்கொண்டு இரண்டாவது முறை அரிசியை கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாட்டினைக் கோருதல் வேண்டும்.

எனது இலக்கம் DFD-2024-I மற்றும் 2024.04.04 ஆம் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஆலோசனைகளில் எந்தவொரு மாற்றமும் இடம்பெறமாட்டாது.

**ஒப்பம்/ கே.எம்.மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம் - தகவலுக்காக
2. செயலாளர், கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு - தகவலுக்காக
3. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
4. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
5. பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
6. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
7. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
8. பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
9. ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
10. தலைவர், நலன்புரி நன்மைகள் சபை - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
11. பணிப்பாளர், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
12. கணக்காய்வாளர் தலைமையதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம் – தகவலுக்காக